பத்தாம் வகுப்பு - தமிழ்

திறன்றித்தேர்வு - 2022 , தஞ்சாவூர் மாவட்டம்.

1) கீழ்வருவனவற்றுள் பெருஞ்சித்திரனார் எழுதிய நூல் அல்லாதது எது ?
அ) உலகியல் நூறு ஆ) தமிழ்ச்சிட்டு இ) கனிச்சாறு ஈ) மகபுகுவஞ்சி
2) சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - யார் கூற்று ?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) தமிழழகனார் இ) சச்சிதானந்தன் ஈ) பாவாணர்
3) கூற்று 1 : பெருஞ்சித்திரனார் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படவுள்ளன.
கூற்று 2 : பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் ஒன்று பாவியக்கொத்து.
அ) கூற்று 1 ,2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி.
4) பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது ?
அ) பள்ளிப்பறவைகள் ஆ) நூறாசிரியம் இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை ஈ) எண்சுவை எண்பது.
5) முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே - இதில் முகிழ்த்த எனும் சொல்லின் பொருள்
அ) தோன்றிய ஆ) வளர்ந்த இ) கொண்ட ஈ) நிலைத்த
6) பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க
அ) மன்னி - நிலைத்து ஆ) தும்பி- வண்டு இ) தென்னன் - பாண்டியன் ஈ) முன்னை - புதுமை.
7) பெருஞ்சித்திரனார் தமிழுணர்வை உலகெங்கும் பரப்ப காரணமாக இருந்த இதழ்கள்
அ) தென்தமிழ், தமிழ்ச்சிட்டு ஆ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு இ) தென்னாடு, தமிழ்மொழி ஈ) தென்மொழி, தமிழ்த்தாய்
8) அன்னை மொழியே - எனத்தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்
அ) பள்ளிப்பறவை ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து இ) கனிச்சாறு ஈ) உலகியல்நூறு
9) சரியான கூற்றைத் தேர்க.
அ) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் பொன். மாணிக்கம்.
ஆ) பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்களுள் ஒன்று தென்மொழி.
இ) பெருஞ்சித்திரனார் பிறந்த ஊர் சேலம் மாவட்டம் சமுத்திரம்
ஈ) பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்களுள் ஒன்று கனிச்சாறு.
10) முதன் முதலாகத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்
அ) கார்டிலா ஆ) கார்ட்டெல்லா இ) விசுபன் ஈ) காடிலா
11) நாடும் மொழியும் நமதிரு கண்கள் - என்று பாடியவர்
அ) இளங்குமரனார் ஆ) பாவாணர் இ) மகாகவி ஈ) திரு.வி.க

12) நெட்டி , மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடியைக் குறிக்கும் சொல்
அ) தாள் ஆ) தட்டு இ) தூறு ஈ) கோல்

13) பொருத்தமற்றதைத் தேர்வு.
அ) கொப்பு- கவையின் பிரிவு ஆ) சினை - கிளையின் பிரிவு இ) போத்து - கொம்பின் பிரிவு ஈ) இணுக்கு - குச்சியின் பிரிவு

14) பொருத்துக.

1. இலை. - அ. சோளம், கரும்பு
2. தாள். - ஆ- தென்னை, பனை
3. தோகை. - இ. நெல், புல்
4. ஓலை. - ஈ. புளி, வேம்பு

அ). 1- ஈ, 2- இ, 3- அ, 4- ஆ. ஆ) 1- இ, 2- ஈ, 3- அ, 4-ஆ. இ) 1- ஆ, 2- இ, 3-ஈ, 4-அ, ஈ) 1- ஈ, 2-ஆ, 3-அ, 4- இ.

15) இளங்குமரனார் பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.
அ) பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கினார் . ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் இ) அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை அமைத்தவர். ஈ) உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

16) பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க.
அ) கழி- மூங்கிலின் அடி ஆ) சண்டு- காய்ந்த இலை இ) வெங்கழி- காய்ந்த கழி ஈ) விறகு- காய்ந்த குச்சி

17) தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொல்
அ) முறி ஆ) தாள் இ) ஓலை ஈஇலை

18) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
அ) தமிழ்நாடு ஆ) இந்தியா. இ) மலேசியா ஈ) சிங்கப்பூர்

19) காய்ந்த குச்சு - காய்ந்த சிறுகிளை எவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
அ) கட்டை, விறகு ஆ) சுள்ளி, விறகு இ) குச்சு, இணுக்கு ஈ) வெங்கழி, விறகு

20) சம்பாவில் மட்டும்........வகையான நெல்கள் உள்ளன.
அ) 40 ஆ) 50 இ) 60 ஈ) 70

21) பொருத்தமற்றதைக் கண்டறிக.
அ) தென்னையின் இளநிலை - குருத்து ஆ) மா, புளியின் இளநிலை - கன்று இ) நெல், கத்திரியின் இளநிலை - நாற்று ஈ) விளாவின் இளநிலை - குட்டி

Padasalai.Net

22) கீழ்வருவனவற்றுள் குலை வகையினைக் குறிக்காத சொல் எது ?
அ) அலகு ஆ) சீப்பு இ) வடலி ஈ) கதிர்

23) தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்களுள் ஒன்று
அ) வரகு ஆ) கார் இ) மட்டை ஈ) சம்பா

24) i) வடு - இளம் காய் ii) கவ்வை - எள்பிஞ்சு iii) நுழாய் - இளம்பிஞ்சு
அ) i - சரி, ii, iii - தவறு ஆ) i , iii - தவறு , ii - சரி இ) i, ii - சரி, iii - தவறு
ஈ) i ii, iii - சரி

25) விளாவின் இளநிலை...... பனையின் இளநிலை..........
அ) கன்று, குட்டி ஆ) மடலி, கூழ் இ) கோல், குருத்து ஈ) குட்டி, வடலி

26) தவறானத் தொடரைத் தேர்ந்தெடுக்க.
அ) அளியல்- குளுகுளுத்த பழம் ஆ) அழுகல் - புழுபூச்சி அரித்த பழம் இ) சூம்பல் - நுனியில் சுருங்கிய காய் ஈ) ஒல்லிக்காய் - தென்னையில் கெட்ட காய்

27) காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொல் அல்லாதது....
அ) குச்சு ஆ) சுள்ளி இ) கட்டை ஈ) வெங்கழி

28) தளிர்.......... முறி..........
அ) நெல், புளி - கொழுந்து, சோளம், வேம்பு - கொழுந்து. ஆ) நெல், புல் - கொழுந்து, புளி, வேம்பு - கொழுந்து இ) தென்னை, பனை - கொழுந்து , நெல், புள் - கொழுந்து. ஈ) புளி, கரும்பு - கொழுந்து, நெல், பனை - கொழுந்து

29) பாவாணர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.
i) உலகத் தமிழ்க்கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
ii) பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
iii) இலக்கண வரலாறு, தனித்தமிழ் இயக்கம் முதலிய நூல்கள் எழுதியுள்ளார்.
அ) i , ii, iii - சரி ஆ) i- சரி, ii, iii - தவறு இ) i , iii - சரி, ii - தவறு ஈ) i, ii - சரி, iii - தவறு

30) தமிழுக்கே சிறப்பாக கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள - யார் கூற்று ?
அ) பாவாணர். ஆ) இளங்குமரனார் இ) கால்டுவெல் ஈ) ஜி.யு.போப்

தயாரிப்பு :
எஸ். ஜெயசெல்வன், பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )
தி.ஆ.மேனிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.
தொடர்புக்கு - 9443740120

Padasalai.Net